**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**

**Uni5 பக்த விஜயம் - 28. ஸ்ரீம்ருத்யுஞ்ஜயர்**

---

யாருக்கும் யார் மூலம் வேண்டினும் மனமாற்றம் ஏற்படும். சமூஹத்தில் ஏற்படும் சின்னச்சின்ன நிகழ்வுகளும் சிலரது பெரும் மாற்றத்துக்கு வழிவகுக்கும்.மனிதர்கள் தாம் மேற்கொள்ளும் செயல்களை விழிப்புணர்வுடன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

தெய்வம் ஒன்றே.அதில் வேற்றுமை காண்பது அறிவீனமே ஆகும்.வேற்றுமையால் தெய்வீகத்தை விட்டு நாம் விலகியே செல்கிறோம்.

அரசனும் ஆண்டி ஆகி ஆன்மீகப் பணி செய்வான்.அதனால் யார் யாருக்கு எப்போது வேண்டுமாயினும் எவ்வகை மாற்றமும் ஏற்படலாம்.அவைப் பூர்வ ஜென்மப் புண்ணியத்தின் பலனே ஆகும்.

உத்தர ப்ரதேசத்தில் ஒரு சிறிய ராஜ்யம்.அதன் தலைநகரம் பேதரி பூர்.அதன் அரசன் சாந்த ப்ரம்மனி.ஆனால் அரசன் மிகவும் போக வாழ்க்கையில் மட்டும் அதிக கவனம் செலுத்தினான்.சதா அந்தப்புரத்தில் மனைவியுடன் காலம் கழித்தான். இவனை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்று அமைச்சர் கலங்கினார்.

### வாழைப்பழம் என்ற குரு

அன்று மிகவும் சுவையான வாழைப்பழங்களை அரசனும் ராணியும் உண்டு விட்டுத் தோல்களை வீசி எறிந்து விளையாடினர். அவ்வழியில் அவ்வூர் பாகவதர் ஸ்ரீபனகர் நடந்து வருகிறார், அவர் மீது அத்தோல்களில் ஒன்று விழுகிறது.அவர் அதை எடுத்து உண்டு மகிழ்வதைப் பார்த்த ராணி கேலி செய்தாள்.

***"ராணிஜி! இதில் என்ன கேலி இருக்கிறது.அடியேன் உண்மையான முக்தி என்ற ஈஸ்வர அன்பாபாகிய பழத்தை சதா உண்டு வருகிறேன்! அதை விட உலகில் வேறு சுவையுள்ள கனிகளும் உண்டோ? சபரி மாதா அப்பழங்களைத் தானே ஸ்ரீராம பக்தியால் உண்டாள்?"*** என்றார்.

இவ்வார்த்தைகள் தம்பதியினரின் மனதில் நல்ல எண்ணங்களை ஏற்படுத்தின.அப்போதே இருவரும் ஸ்ரீபனகரின் பாதங்களை வணங்கினர்.

***"ராஜ! ராணி! உங்களைப் பார்த்துத் தான் இவ்வூர் மக்கள் வாழ்வர். தாங்களுக்குள் இறைவன் வாழ்வதை உணர்க.அதன் மூலம் மக்களைக்***

***காக்கும் அற்புதப் பணியை மேற்கொள்க.அதைத் தானே அரச குல ராமனும் கண்ணனும் செய்தனர்?"*** - என்றார் ஸ்ரீபனகர்.

அவர் மூலம் மூல மந்த்ர தீக்ஷை பெற்றுக் கொண்ட அரச தம்பதியினர் மெதுவாகப் பக்குவம் பெறுகின்றனர்.அரசனின் மாற்றம் மக்களுக்கு நன்மைகள் செய்தன.இந்நிலையில் பண்டரிபுர யாத்ரையை அரச தம்பதிகள் ஸ்ரீபனகருடன் மேற்கொண்டனர்.

**ஈசன் தந்த பாராயண நூல்**

பாண்டுரங்கனை த்யானித்துத் தான் இன்னும் விழிப்புணர்வில் லயிக்கவும் அரச பணிகளைச் செவ்வனே செய்யவும் வழிகாட்டும்படி ப்ரம்மனி வேண்டினான்.அப்போது அவ்வூரில் உள்ள ஒரு யோகி அவனுக்கு "விவேக சிந்து" என்ற பழமையான ஆன்மீக நூலை அளித்து, அதை விழிப்புணர்வுடன் பாராயணம் செய்யும்படிக் கூறி, "ம்ருத்யுஞ்ஜய்" என்ற புதிய பெயரையும் அளித்தார்.தம்பதிகள் தற்போது பாகவதப் பரிணாமம் எய்தி விட்டனர்.

ஞான நூல் பாராயணம் இவருள் பல அருமையான மாறுதல்களை ஏற்படுத்தியது. மிக எளிய முறையில் வாழ்க்கையில் பக்தி கலந்த உண்மையான ஆன்மீகத்தை எவ்வாறு பின்பற்றுவது என்று இவர் மக்களுக்கு எடுத்துச் சொல்லி வழிகாட்டினார்.

**ஹரிஹர பேதம் வேண்டாம்!**

அக்காலத்தில் சிவவிஷ்ணு பேதங்கள் மிகவும் அதிகமாய் இருந்தது.எளிய மக்களுக்கு இதனால் ஆன்மீகத்தில் குழப்பங்கள் உண்டாயின.ப்ரம்மனி சிவவிஷ்ணு பேதம் எப்படி அமைகிறது, ஆனால் அவை இரண்டும் ஒன்றே என்ற வேத வாக்கிய விளக்கத்தை அளிப்பார்.பாண்டுரங்கனையே ஸ்ரீமத் ஆதி சங்கரர் ப்ரஹ்ம லிங்கமாக த்யானம் செய்வதையும், பாண்டுரங்கனின் சிரசில் சிவலிங்கம் உள்ளதையும் அவர் எடுத்துக் கூறினார்.

அவ்வூரில் வாழ்ந்த ஒரு சைவன் பவராய்.அவன் இவரது உபதேசங்களில் உள்ள உண்மைகளை உணர்ந்து இவரையே குருவாகக் கொண்டு இவரது ஆன்மீகப் பாடங்களைப் பரப்பினான்.இதனால் கோபம் கொண்ட பவராயின் குடும்ப குரு சமுச்சி தேவ் இவனை சாதியை விட்டுத் தள்ளி வைத்து விடுகிறார்.அதைப் பற்றி பவராய் கவலை கொள்ளவே இல்லை!

**காணமல் போன லிங்கங்கள்**

வீர சைவர்கள் கழுத்தில் ப்ரஹ்மத்தைக் குறிக்கும் சிவலிங்கத்தை அணிவது

இன்றும் மரபு.ஒரு முறை காசிபதி என்ற ராஜா தன் அரண்மனையில் அன்னதானம் செய்தான்.அப்போது அவ்வூர் வீர சைவர்கள் வந்தனர்.அவர்கள் பவராயை அழைக்கவில்லை.

சாப்பிடும் முன் சிவ பூஜை செய்ய லிங்கத்தை எடுக்க, குப்பிகளைத் திறந்த போது அவர்கள் லிங்கங்கள் காணவில்லை [அவர்கள் விழிப்புணர்வில் இருந்து விலகி நின்றனர் என்றே பொருள்]

மன்னன் இதைப் பார்த்து மனம் கவலைப்பட்டு, "என்ன பாவம் செய்தீர்கள்?" என்றான்.அப்போது அவர்கள் ப்ரம்மனியின் வரலாறு, தங்கள் இன பக்தன் பவராயின் பக்தியையும் அவனுக்குத் தாங்கள் தந்த தண்டனையையும் விளக்கினர்.

அதைக் கேட்ட அரசன், ***"என்னே பாவம் செய்தீர்?! அரசனாய் வாழ்ந்து பக்தனாய் மாறி மக்களுக்கு தர்மம் செய்யும் மாமனிதர் ப்ரம்மனி, அவரது தத்துவங்கள் உங்களின் அறியாமைக்கு விளங்கவில்லை.காரணம் ஆண்வம்.அதனால் தான் உங்கள் விழிப்புணர்வின் அடையாளமான லிங்கம் காணவில்லை!"*** என்று கூற,பலர் அதை ஏற்றுக் கொண்டு ப்ரம்மனியையும் பவராயையும் கண்டு மன்னிப்பு வேண்ட, அவர்களின் அறியாமை தெளிந்தவுடன் லிங்கங்கள் மீண்டு வந்தன.

அச்சைவர்கள் அன்று முதல் பண்டரீ தேவனை சிவவிஷ்ணு வடிவாகவே கண்டு ஆன்மீகப் பயிற்சிகள் செய்தனர்.

ஹரி ஓம்!